# 2022 ஆம் ஆண்டில் மாணவர்கள் இழந்த கற்றல் வாய்ப்புகளை முழுமைப்படுத்துவதற்கான சிறப்புப் பாடத்திட்டம்

## தரம் 11 குடியியற் கல்வி – முதலாம் தவணை


சமூக விஞ்ஞானத் திணைக்களம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை



www.nie.lk

2022 ஆம் ஆண்டில் இழந்த காலத்திற்கான மீட்புத் திட்டம் (**Recovery Plan For Learning Loss 2022**)

தரம் 11

( தரம் 11 முதலாம் தவணைக்கு பாடவேளைகள் 12உம் இரண்டாம் மூன்றாம் தவணைகளுக்கு 18 பாடவேளைகள் வீதம் மொத்தமாக 48 பாடவேளைகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது )

| **தேர்ச்சி** | **தேர்ச்சி மட்டம்** | **கற்றல் பேறுகள்** | **விடய உள்ளடக்கம்** | **ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள செயற்பாட்டு இலக்கம்** | **பாடநூலின் பாடத்தின் இலக்கமும் தலைப்பும** | **பாட வேளைகள்** |
|---|---|---|---|---|---|---|
| **தரம் 11 முதலாம் தவணையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கற்றல் பேறுகளும் பாடமும்** | | | | | | |
| சட்டமும் நீதியும்<br>11.1<br>சட்டத்தை மதிக்கும் பிரசையாக வாழ்வார். | வெவ்வேறு சட்ட வகைகளையும் அவ்வாறான சட்டம் தொடர்பான அரசின் வகிபாகத்தையும் நுணுகியாய்வார். | • ‘சட்டம்’ என்பதை வரைவிலக்கணம் மூலம் விளக்குவார்.<br>• ‘சுதேச சட்டம்’ என்பதற்குப் பொருள் விளக்கமளிப்பார்.<br>• ‘சர்வதேச சட்டம்’ என்பதை விபரிப்பார்<br>• வெவ்வேறு சட்ட வகைகளின்படி அரசின் வகிபாகம் பற்றிய விபரங்களை முன்வைப்பார். | • ‘சட்டம்’ - வரைவிலக்கணமும் அறிமுகமும்<br>• பல்வேறு சட்ட வகைகள் மற்றும் அதன் ஒரு துறைக்குரிய அரசின் வகிபாகம் | 11.1.1 | 01. சட்டமும் நீதியும்<br>பாடநூலில் இருந்து தேவையான பகுதியை தெரிவுசெய்க | 03 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 11.1.2<br>இலங்கையின் தற்கால நீதிமன்ற முறைமையையும் அதன் வளர்ச்சியையும் பகுத்தாய்வார். | • தற்கால நீதிமன்ற முறைமையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை விளக்குவார்.<br>• தற்கால நீதிமன்ற முறைமையைச் சேர்ந்த நீதிமன்ற வகைகளைப் பெயரிடுவார்.<br>• தற்கால நீதிமன்ற வகைகளின் அதிகாரங்களையும் பணிகளையும் விபரிப்பார்.<br>• தற்கால நீதிமன்ற முறைமைக்கு உட்படும் நீதிமன்றங்கள் தொடர்பான தகவல்களைத் தொகுப்பார்.<br>• தற்கால நீதிமன்ற வகைகளின் அதிகாரங்கள், பணிகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலானது நல்வாழ்வுக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | • தற்கால நீதிமன்ற முறைமையின் வரலாற்று ரீதியான வளர்ச்சி<br>• நீதிமன்ற வகைகளும் அவற்றின் அதிகாரங்களும் பணிகளும் | 11.1.2 | | |
| | சட்டத்தைச் செயற்படுத்தும் முதன்மையானோரின் பணிகளை நுணுகியாய்வார். | • நீதி அமைச்சரின் பொறுப்புக்களை விளக்குவார்.<br>• பிரதம நீதியரசரின் பொறுப்புக்களை விபரிப்பார். | • நீதி அமைச்சர்<br>• பிரதம நீதியரசர்<br>• சட்டமா அதிபர் | 11.1.3 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | • சட்டமா அதிபரின் பொறுப்புக்களை விளக்குவார் | | | | |
| | பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மாற்று முறைகளைப் பரிசீலிப்பார். | • பிணக்குகளை நடுத்தீர்ப்புச் செய்யும் மாற்று முறைகளைக் குறிப்பிடுவார்.<br>• பிணக்குகளை அமைதிநேயமான வகையில் தீர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார். | • பிணக்குகளை தீர்ப்பதற்கான மாற்று வழிமுறைகளை அறிமுகம் செய்தல் | 11.1.4 | | 01 |
| | 11.1.5 சட்டத்தின் ஆதிபத்தியத்தையும் தாமதமின்றியும் பக்கச்சார்பின்றியும் நீதியை வழங்குவதன் முக்கியத் துவத்தையும் மதிப்பார். | • ‘சட்டத்தின் ஆதிபத்தியம்’ என்பதற்குப் பொருள் விளக்கமளிப்பார்.<br>• நீதிமன்றின் சுயாதீனம் என்பது யாது என விளக்குவார்.<br>• நீதிமன்றின் சுயாதீனத்தினது முக்கியத்துவத்தை மதிப்பார்.<br>• நீதிமன்றின் சுயாதீனத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளை விபரிப்பார் | • சட்டத்தின் ஆதிபத்தியம் - அறிமுகம்<br>• நீதிமன்றின் சுயாதீனம் - அறிமுகம், அதன் முக்கியத்துவம்<br>• நீதிமன்றின் சுயாதீனத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் | 11.1.5 | | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அரசின் வெவ்வேறு படிநிலைகள் 11.2 அரசின் வெவ்வேறு படிநிலைகளின் வகிபாகங்கள் பற்றி நுணுகியாய்ந்து பொறுப்புள்ள ஒரு பிரசையாக வாழ முற்படுவார். | மத்திய அரசு, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைப்புக்களின் வளர்ச்சியைப் பகுத்தாய்வார் | • மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை விபரிப்பார்.<br>• மத்திய அரசின் அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கான காரணங்களை விபரிப்பார்.<br>• பிரதேச அலகுகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குகையில் தோன்றும் பிரச்சினைகளை விளக்குவார். | • முன்பு காணப்பட்ட நிலைமைகளையும் தற்கால கட்டமைப்புகளையும் அறிமுகஞ் செய்தல்<br>• பிரதேச அலகுகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்<br>• அதிகாரத்தைப் பரவலாக்குகையில் தோன்றும் பிரச்சினைகள் | 11.2.1 | 02 அரசின் வெவ்வேறு படிநிலைகள் | 02 |
| | மத்திய அரசு, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைப்புக்களின் வளர்ச்சியைப் பகுத்தாய்வார். | • மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களைக் கலந்துரையாடுவார்.<br>• சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் பற்றி | • மத்திய அரசின் கட்டமைப்பும் அதிகாரங்களும் பணிகளும்<br>• மாகாண சபைகளின் கட்டமைப்பும் அதிகாரங்களும் பணிகளும்<br>• உள்ளூராட்சி | 11.2.2 | | 03 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அறிவூட்டம் செய்தலானது தனியாளின் நாளாந்த வாழ்க்கைக்கு முக்கியமானது என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார் | நிறுவனங்களின் கட்டமைப்பும் அதிகாரங்களும் பணிகளும் | | | |
| | 11.2.3<br>தற்கால ஆட்சி அமைப்புக்களின் அபிவிருத்தி சார்ந்த மாற்றங்களை மதிப்பார். | • மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தேவை பற்றியும் விளைதிறன் பற்றியும் கலந்துரையாடுவார்.<br>• பிரசையின்பால், அரசாங்கத்தின் வெவ்வேறு படிநிலைகளின் பொறுப்புக்களையும் அரசாங்கத்தின்பால் பரசையின் பொறுப்புக்களையும் கடமைகளையும் பட்டியற்படுத்துவார். | • பிரசையின் பால் அரசாங்கத்தின் வெவ்வேறு படிநிலைகளின் பொறுப்புக்களும் வகைக்கூறலும்<br>• அரசாங்கத்தின் வெவ்வேறு படிநிலைகளின் பால் பிரசையின் பொறுப்புக்களும் கடமைகளும் | 11.2.3 | | 01 |
| மொத்தம் | | | | | | 12 |